1992 ஏப்ரல் 10]

548—

மீனவ மக்களுக்குக் கடன் வசதி மானியத்தொகையை அதிகரித்தல்.

*5415— திரு. பி. வி. இராஜேந்திரன் :

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மீனவ மக்களுக்கு கட்டுமரத்தில் பொருத்தும் அவுட் போர்டு இஞ்சின் மானியத்துடன் கூடிய கடன் வசதி வழங்குவதில் மானியத்தொகையினை அதிகப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வெளிப் பொருத்தும் இயந்திரம் ஒன்றுக்கு தற்போது ரூபாய் 7,500 என்று வழங்கப்பட்டதை, நமது தமிழக முதலமைச்சர், நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கக்கூடிய தமிழக முதல்வர் அவர்கள் இன்றைக்கு ரூ. 10 ஆயிரமாக உயர்த்தி உத்தரவிட்டிருக்கிறார்கள். இதற்கு மத்திய அரசும் நிர்வாக ஒப்புதல் தந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 549, திரு. கி. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

549—

சிறுதொழில் தொடங்க மூலப்பொருள் பெற நடவடிக்கை.

*4997— திரு. கி. பாலசுப்பிரமணியன் :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழகத்தில் தொழில் வளம் பெறுக ஏதுவாக தேவையான (Open General Licence) விதிகளைத் தளர்த்தி தமிழகத்தில் சிறுதொழில் தொடங்குவதற்கு மூலப் பொருட்கள்(Raw Materials) பெற்று வழங்க மைய அரசினை அணுகி அனுமதி பெற அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா ?

[1992 ஏப்ரல் 10

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிறு தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருட்களையும் வெளிப்படை பொது உரிமத்தின் (O.G.L.) கீழ் கொண்டுவர மைய அரசின் அனுமதிபெற வாய்ப்பில்லை.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகளுக்காக வரவழைக்கக்கூடிய அச்சடிக்கக்கூடிய காகிதங்களை எல்லாம் எஸ்.டி.சி. நிறுவனத்தின் மூலம் 'கேனலைஸ்' செய்ததை Decanalise செய்து விட்டார்கள். அதுபோன்று மைய அரசு கட்டுப்பாடுகளைத் தளர்த்தியுள்ளது. இந்த நிலையிலே பத்திரிகைகள் தொழில்கள் நன்கு வளர்ச்சியடையக்கூடும். அதே போன்று சிறு தொழில்களைத் தொடங்குவதற்கு வேண்டிய மூலப் பொருள்களை நாம் வெளி நாட்டிலிருந்து வாங்குவதற்கு கட்டுப்பாடுகளைத் தளர்த்தி Open General Licence மூலமாக வரவழைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். மத்திய அரசு இதை நிச்சயமாகச் செய்யும் என்று நான் எண்ணுகிறேன். ஆகவே, இந்தத் திட்டத்தை அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுதொழில் நிறுவனங்கள் பொது உரிமத்தின் கீழும் அதன் துணை உரிமத்தின் கீழும், வேண்டிய மூலப் பொருட்களை இறக்குமதி செய்ய மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. மேலும், மூலப் பொருள்களைப் பெறுவதற்கு வேறு வகையான தடை எதுவும் இருக்குமானால், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய மேலான ஆலோசனைப்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லிய விளக்கத்திற்கு நன்றி, மற்றும் சிறு தொழில் வளர்வதற்கு இது முன்னோடியாக இருக்கும் என்று கருதுகிறேன்.